In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.10 |
| Name: Rajeshkannan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 29.08.2023

**(Accused is present. )**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரம், காலனி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை பார்த்து உள்ளேன். 17.05.2020 ம் தேதி இரவு 8.10 மணிக்கு நானும், ராசு மகன் அழகுமலை ஆகியோரும் அய்யம்பாளையம் பிரிவில் டீ சாப்பிட சென்றபோது அந்த இடத்தில் எங்கள் பக்கத்தில் எதிரி சங்கிலி நின்று கொண்டு இருந்தார். அப்போது பட்டிவீரன்பட்டி ஆய்வாளர் 2,3 போலீசாருடன் அங்கு வந்தார்கள். அவர்களை பார்த்தவுடன் சங்கிலி ஓட முயற்சித்தான். அப்போது ஆய்வாளரும், போலீசாரும் சுற்றிவளைத்து சங்கிலியை பிடித்தார்கள். அந்த இடத்தில் வைத்து சங்கிலி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடன் வந்தால் சம்பவத்தில் குத்திய கத்தியை காட்டுவதாக சொன்னார். ஆய்வாளர் எங்களையும் அவர்களுடன் கூட்டிச்சென்றார். சங்கிலி எங்களை அவரது வீட்டிற்கு கூட்டிச் சென்று அவரது வீட்டு படிக்கட்டுக்கு கீழ் வைத்திருந்த கத்தியை எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தார். அந்த கத்தியை ஆய்வாளர் அத்தாட்சியின் கீழ் கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து வாங்கினார். எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த இரத்தம்பட்ட டீ சர்ட், டிராக் பேன்ட் இரண்டையும் வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்ததை அத்தாட்சியின் கீழ்

ஆய்வாளர் கைப்பற்றினார். அதிலும் நாங்கள் கையெழுத்து செய்தோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் நாங்கள் கையெழுத்து போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.5. கத்தி கைப்பற்றியதற்கான அத்தாட்சி அதசாஆ.6. இரத்தம்பட்ட டீ சர்ட், டிராக் பேன்ட் இரண்டையும் கைப்பற்றியதற்கான அத்தாட்சி அதசாஆ.7. என்னுடன் அழகுமலை என்பவரும் கையெழுத்திட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் சாபொ1 கத்திதான் அன்றைய தினம் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் டீ சர்ட்டும், லோயர் பேன்டும் அன்றையதினம் கைப்பற்றப்பட்டதுதான். டீ சர்ட் சாபொ.2. லோயர் பேன்ட் சாபொ.3. போலீசார் எதிரி மற்றும் கைப்பற்றிய பொருட்களுடன் காவல் நிலையம் சென்றார்கள். நானும் அழகுமலையும் வீட்டிற்கு சென்றுவிட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.29 17:48:48 +0530

Principal District Judge,
Dindigul.